Registered as a Newspaper

லக்கி பிளாஸா
★ பேபி ஐயிட்டம்
★ மின்சார மனையியற் பொருட்கள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்களை
நிதான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
67, 68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

தரத்தில் சிறந்த
நவீனமான பொருட்களை
நிதான விலையில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய
இடம்
லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு ஐப்பசி மீ 14 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை] 26 (31-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 295

# கோட்டை வேட்டுக்கு பள்ளிமாணவன் பலி

## சென்றலில் பாடசாலை நேரத்தில் நடந்த பயங்கர சம்பவம்

—அலுவலகச் செய்தியாளர்; க. இரத்தினராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், அக்டோபர். 31

**யாழ்ப்பாணம் மத்திய (சென்றல்) கல்லூரி மீது பாடசாலை நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதன் விளைவாக கோட்டையில் இருந்து ஏவப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு அக் கல்லூரி மாணவன் பொன்னம்பலம் விபுலானந்தன் (17வயது) பலியானார்.**

குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டுக் கலவரமடைந்த மாணவர்களை அமைதியாக இருக்குமாறு கூறிக்கொண்டிருந்த விபுலானந்தன் குண்டு பட்டு இரத்தம் பீறுடச் சரிந்து விழுந்த காட்சி மாணவர்களைத் திகில் அடைய வைத்தது.

இச்சம்பவம் பற்றிய விவரமாவது:-

நேற்றுக்காலை சுமார் 9. 20 மணி அளவில் யாழ்- கோட்டைப் பக்கமாக சில நிலக் கண்ணி வெடிகள், வெடித்தன.

அதனைக் கேட்டு யாழ். மத்திய கல்லூரியின் வணபிதா 'காஸ்' ஞாபகார்த்த மண்டபத்தில் உள்ள மாணவர்கள் பெரும் கலவரமடைந்தனர். பயத்தினால் சத்தம் போட்டனர்; அழுதனர்.

இதனைச் சமாளிக்கும் முகமாக மாணவர் தலைவர் பொன்னம்பலம் விபுலானந்தன் மேல் மாடிக்குச் சென்று மாணவர்களை கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தார். அவ்வேளை கோட்டையில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாணவர்கள் கலவரமடைந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மாணவர் தலைவர் பொன்னம்பலம் விபுலானந்தனின் முதுகுப் புறத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. அவர் இரத்தம் பீறிட்ட நிலையில் சரிந்து விழுந்தார்.

அவர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவசரமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. எனினும் சுமார் 11. 30மணியளவில் விபுலானந்தனின் உயிர் பிரிந்தது. ஆசிரியர் மாணவர் கதறி அழுதனர்.

அங்கு வந்திருந்த பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் விபுலானந்தனின் மரணம் கேட்டு ஆஸ்பத்திரியில் கதறி அழுத வண்ணம் நின்றனர்.

பல மாணவர்கள் தாமாகவே முன்வந்து இரத்த தானமும் செய்தனர்.

எனினும் அவரது உயிரைக் காப்பற்ற முடியாது போய்விட்டதை அறிந்த இருவர் ஆஸ்பத்திரியில் மயங்கி விழுந்தனர்.

மரண விசாரணையை யாழ் பதில் நீதிவான் திரு. ஏ. அன்ரனி நடத்தினர்.

விபுலானந்தனின் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான யாழ் மத்திய கல்லூரி மாணவன் விபுலானந்தனின் உடலம்.

## வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 31

யாழ் நகர்ப்பகுதிகளில் உள்ள கல்லூரி மாணவ மாணவிகளை இன்று வகுப்புக்களைப் பகிஷ்கரிக்குமாறு யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான எமது கல்லூரி மாணவனின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற இருப்பதால் அதில் பங்கு பற்றுமாறு அவர்கள் மேலும் கேட்டுள்ளனர்,

அதேவேளை யாழ் மத்திய கல்லூரி இன்று மூடப்பட்டிருக்கும். (இ-10)

## பல்கலைக்கழக ஊழியர்சங்கம் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், அக். 31

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் பல்கலைக் கழக முன்றலில் ஒன்று கூடி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யாழ் நகரில் நடந்த ஷெல் தாக்குதலின் போது யாழ் பல்கலைக் கழக மகப்பேற்று மருத்துவக் கிளையின் ஊழியர் திரு. எஸ். குமாரசிங்கம் காயம் அடைந்த சம்பவம் தொடர்பாகவே

(4ம் பக்கம் பார்க்க)

## "சத்தம் போடாதீர்" என்றவர் இரத்தம் பீறிட பின்புறமாகச் சரிந்தார்!

யாழ்ப்பாணம், அக். 31

''சத்தம் போடாமல் வகுப்பில் அமைதியாக இருங்கள்'' எனக் கூறியவர் திடீரென இரத்தம் பீறிட்ட நிலையில் பின்புறமாகச் சரிந்து விழுந்தார்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பொன்னம்பலம் விபுலானந்தனுக்கு அருகில் நின்ற சக மாணவர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுக்காலை கோட்டைப் பக்கமாக குண்டுச் சத்தங்கள் கேட்டன. குண்டுச்சத்தங்கள் கேட்பதை அடுத்து நாங்கள் பீதியடைந்த நிலையில் இருந்தோம்.

அப்பொழுது காலஞ்சென்றவர் மேல் மாடிக்கு வந்து சத்தம் போடாமல் இருக்கும்படி கூறினர்.

நான் அப்பொழுது அவருக்கு அருகில் நின்றேன்.

திடீரென துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது காலஞ்சென்றவர் பின்புறமாகச் சரிந்து விழுந்தார்.

நான் கைத்தாங்கலாக இவரைப் பிடித்த பொழுது முதுகுப் பகுதியால் இரத்தம் பீறிட்டு ஓடிக் கொண்டிருந்தது.

இதனை அடுத்து ஏனைய மாணவர்களின் உதவியுடன் அவரை தனியார் வான் மூலம் ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தோம்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

# மாங்குளம் கண்ணிவெடியில் 10 சிப்பாய்கள் பலி

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 31

நேற்று மாங்குளத்தில் ரோந்து வந்த சிப்பாய்களின் வாகனத் தொடர் மீது புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் சகிதம் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வவுனியாவில் இருந்து மாங்குளம் நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

நேற்றுக்காலை 11-30 மணி அளவில் பழைய முறிகண்டிப் பகுதியில் சிப்பாய்கள் வந்துகொண்டிருந்த 'எல்வ் டிரக்' ஒன்று புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது.

இதன் காரணமாக பத்துச் சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து சரமாரியான துப்பாக்கி வேட்டுகளும் அங்கு தீர்க்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

இச் சம்பவத்தை அடுத்து ஹெலிக்கொப்டர் ஒன்றும் அப் பகுதிக்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (இ-10)

## தேரரின் சபதம்

கொழும்பு, அக். 31

வானமே இடிந்து வீழ்ந்தாலும் மாகாண சபை யோசனைகளை அமுல் நடத்தியே தீருவேன் என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

நாம் அவருக்குக் கூறுகின்றோம், ஆழ்கடல் வற்றினாலும் மாகாண சபை யோசனைகளை அமுல் நடத்த விடமாட்டோம் என்று.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மாகாணசபைக் கூட்டத்தில் பேசிய கிரிமொட்டியா இரட்னசார தேரர் மேற்கண்டவாறு சபதம் செய்தார். (இ-ஐ-எ)

## ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவு வெளிவந்தது

யாழ்ப்பாணம், அக். 31

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகள் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு நேற்றுக்கிடைத்தன.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளுக்கு கிடைத்த பரீட்சை முடிவுகள் வருமாறு;

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் நா. சுகந்தன் கணிதத் துறையில் நான்கு பாடங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹேலீஸ் திறப்பு விழா

யாழ்ப்பாணம் அக். 31

கொழும்பு ஹேலீஸ் லிமிட்டெட்டின் வடமாகாண விற்பனை, சேகரிப்பு நிலையமும் படம் சேகரிப்பு நிலையமும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு 380 ஆம் இலக்கம் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாண விற்பனை முகாமையாளர். திரு. விமலானந்தன் இதனை திறந்து வைப்பார். (இ)

## கோட்டை முகாமை அகற்றுமாறு அரசாங்க வைத்தியர் சங்கம் கோரிக்கை

### அத்துலத்துடன்நேற்றுசந்திப்பு

யாழ்ப்பாணம், அக். 31

யாழ் கோட்டை இராணுவமுகாமை அகற்றுமாறு தேசிய பாதுகாப்பு அமைச்சரை அரசாங்க வைத்தியர்சங்கத் தூதுக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று அத்துலத்முதலியின் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது யாழ் பெரியாஸ்பத்திரிக்கு மிக அண்மையில் கோட்டை இராணுவ முகாம் அமைந்துள்ளது பற்றியும் அங்கிருந்து கடந்த காலங்களில் நான்குமுறை ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

அங்கு கடமையாற்

(4 ஆம் பக்கம் பார்க்க)



ஓம் ஓம், உவை செய்ய மாட்டோம், செய்ய மாட்டோம் எண்டு சொல்லித்தானே ஆக்களைக் கொல்லுகினம்...! உதுகளை நம்ப நாங்கள் என்ன மடையரே?

### சுபநேரம்

31-10-1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.03 முதல் 7 33 வரை

ராகுகாலம்:
10.33 முதல்12.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஐக்கியத்தை சீர் குலைக்கும்

# ஆயுத அச்சுறுத்தல்கள் நீக்கப்படவேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம் அக். 31

போராளிகளிடையே ஐக்கியத்தை சீர் குலைக்கும் வகையிலான ஆயுத அச்சுறுத்தல்கள் நீக்கப்பட வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எப். நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் சாரம் வருமாறு:-

ஈழத்தில் மீண்டும் ஒரு இரத்தக் களரியைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது அனைத்து செயற்பாடுகளையும் ஈழத்தில் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவலொன்று பத்திரிகைகள் வாயிலாக ஈழ மக்களுக்கு கிடைத்திருக்கிறது.

எம்மை ஒடுக்கிவரும் சிறிலங்கா அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து நேரடியாக ஆயுதக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து ஈழப் போரை பலவீனப் படுத்தும் சகல வழிகளிலும் முனைப்புடன் செயலாற்றிவரும் நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் எமது விடுதலை யுத்தம்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் புதிய மருத்துவ சேவை பிரிவு

யாழ்ப்பாணம், அக். 31

யாழ்-நகரில் புதிய அவசர மருத்துவசேவைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சேவை சம்பந்தமாக மருத்துவ சேவைப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:

யாழ் கோட்டை இராணுவ முகாமினுள் முடங்கிக்கிடக்கும் அரச படையினர் 29 ஆம் திகதி மோட்டோ ஷெல் தாக்குதலை எம் மக்கள் மீதும் யாழ்நகரின் சுற்றுப் புறங்களிலும் மேற்கொண்டனர்.

இவ் வேளையில் எமது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத் தகர்ப்புக்கு 'ஈரோஸ்' உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், அக். 31

திருமலை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் தகர்க்கப்பட்டமைக்கு 'ஈரேஸ்' உரிமை கோரி இருக்கிறது.

இது தொடர்பாக 'ஈரோஸ்'நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

28.10.86 செவ்வாய்க்கிழமை திருமலை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் எம்மால் முற்றாகத் தகர்க்கப்பட்டது. திருமலையில் நிலைகொண்டுள்ள இராணுவ, கடற்படை, விமானப்படை தளங்களின் மத்தியில் பலத்த பாதுகாப்புடன் செயற்பட்டு வந்த இப்பரிவர்த்தனை நிலையத்துள் நள்ளிரவு உட்புகுந்த விஷேட இராணுவப் பயிற்சி பெற்ற எமது தோழர்கள் அங்கிருந்த ஊழியர்களை வெளியேற்றி விட்டு இத்தகர்ப்பை நிறைவேற்றிவிட்டு பாதுகாப்பாக இருப்பிடம் திரும்பினர்.

திருமலை நகரை ஸ்ரீலங்கா அரசு பூரணமாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அந்நிய முதலீடுகளுக்கு இடமளிப்பதன் மூலம் எமது பிரதேசங்களை ஏகாதிபத்தியத்திடம் தாரை வார்க்க முனைந்து நிற்கிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையினூடு திருமலை நகரில் செயற்பட்டுவரும் அனைத்து அந்நிய தொழிலகங்களும், அரச நிறுவனங்களும், வெளித்தொடர்பு எதுவுமின்றி

(4-ம் பக்கம் பார்க்க)

இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
"அர்ச்சுனா"

★ அறிவுலக அறிமுகம்
★ கணிதப்புதிர்
★ எண் சிலம்பம்
★ பயணம் தந்த பாடம்
★ சிந்தனைக் கட்டுரைகள்
★ குட்டிக் கதைகள்
★ கருத்தோவியங்கள்
★ கணனி நிகழ்ச்சித் திட்டம்
★ சிந்தனைக் கருவூலங்கள்

உதயன் நிறுவனம் வழங்கும்
"தீபாவளிப் பரிசு"
அர்ச்சுனா
(திங்கள் இதழ்)
கண்கவர் வர்ண அட்டைப் படத்துடன்
அர்ச்சுனா விற்பனையாகின்றான்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-00 மட்டுமே

இளைய தலைமுறையின் ... தரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு இம் முறை 300 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம், அக். 31

நுவரெலியா, சீதா எலியபண்ணையில்இருந்து 300 மெட்ரிக் உள்ளூர் விதை உருளைக்கிழங்கு இம்முறை யாழ் மாவட்டத்துக்குக் கிடைக்கவுள்ளது.

500 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு தேவை என்று யாழ் விவசாயத் திணைக்களம் கோரிக்கை விட்டிருந்தது. எனினும் 200 மெட்ரிக் தொன் குறைவாகவே இப்போதுவழங்கப்படும்.

அச்சுவேலி, நீர்வேலி கூட்டுறவுச் சங்கங்கள், உடுவில், கீரிமலை, நல்லூர் கமநல சேவை நிலையங்கள் ஆகியவற்றின் கண்காணிப்பின் கீழ் 300 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

விதை கிழங்கு பெறுவதற்கு முன்கூட்டியே பதிவுசெய்தவிவசாயிகள் ஒரு மெட்ரிக் தொன் பெட்டிக்கு ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெறவேண்டும்.

பின்னர் சம்பந்தப்பட்ட சங்கம் வழங்கும் கடிதத்தைக் கொண்டு சென்று நுவரெலியாவில் விதை கிழங்கைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

விவசாயிகளின் நலன் கருதி, கூட்டாக விவசாயிகள் சேர்ந்து தனியார் லொறிகள் மூலம் விதை கிழங்கைத் தருவித்துக் கொள்ளச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கமநல சேவை நிலையங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

இதன்படி முதலாவது தொகுதி விதை கிழங்கைக் கொண்டுவர முதலாவது லொறி நவம்பர் 5ஆம் திகதி நுவரெலியா செல்லும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதனிடையில் இப்படி நுவரெலியா விதை கிழங்கை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருபவர்கள் அதை விற்பதானல் ஒரு மெட்ரிக் தொன் 1,100ரூபா விதமே விற்க வேண்டும்என்றும்அதற்கு அதிகமான விலைக்கு விற்கப்படக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

உருளைக்கிழங்குச் செய்கை யாழ் மாவட்டத்தில் நவம்பர்15 க்குப் பின்னர் ஆரம்பமாக உள்ளது.

ஆர்க்கா, டெசிரி, விக்காரோ ஆகிய மூன்று ரக விதை கிழங்கே இம்முறை யாழ் மாவட்டம் அனுப்பப்படவுள்ளன.

(உ-எ)

## மோதிரம் யாருடையது?

யாழ்ப்பாணம், அக். 31

யாழ் போதனா வைத்தியசாலையில் புதனன்று காலை குழந்தையின் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

உரியவர்கள் அதற்குரிய ஆதாரங்களைக் காட்டி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியனிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(உ - எ)

சேவை

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையானாலும் வாங்கவும் / விற்கவும் தினமும் எம்மிடம் வாருங்கள். ஏல விற்பனை நிலையம், பொதுச்சந்தை, (சந்திக் அருகாமையில்) கோப்பாய்.

A/L 87

DAY CLASS

பிரிவு III

விரைவில் ஆரம்பம்

New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி

● குவைத்

● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,

குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல. 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## நாடக அரங்கேற்றமும் ஆண்டு நிறைவும்

யாழ்ப்பாணம், அக். 31

யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் ஆதரவுடன் நல்லூர்க் கல்வி வள நிலையம் நடத்தும் நல்லூர் வட்டாரப் பாடசாலை ஆசிரியர், மாணவருக்கான நாடகக் களப் பயிற்சியில் உருவான சமூக நாடகமான 'தியாகத் திருமணம்' அரங்கேற்றமும் கல்வி வள நிலைய ஆறும் ஆண்டு நிறைவு விழாவும் இன்று வெள்ளி காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராகக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக பிரதம கல்வி அதிகாரிகளான திரு. கு. சோமசுந்தரம், திரு. க. கந்தசாமி ஆகியோரும் கலந்து கொள்வர்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமை வகிப்பார்.

(இ-எ)

# தீர்வு காணும் சாத்தியம் குறித்து அரசுக்கு நம்பிக்கையில்லை

கொழும்பு, அக். 31

தனது யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் மூலம் தமிழர் தரப்பினர் தீர்வு காண முன்வருவர் என்ற நம்பிக்கை இலங்கை அரசுக்கு இல்லை.

இப்படி கொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுவதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபன அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 22 மாதகாலத்தில் அதிகாரபூர்வமற்ற கணக்கெடுப்பின்படி சுமார் 2,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

அடுத்த ஆண்டில் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கக் கூடிய விதத்தில் பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கப் பட்டுள்ளது. இராணுவத்தைத் தயார் நிலையில் வைப்பதே இதன் நோக்கம்

இதனிடையில் போராளிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினல் என்ன என்ற முயற்சியிலும் இலங்கை ஈடுபட்டுள்ளது.

உத்தி, ஆயுதபாவனை ஆகியவிஷயங்களில்நவீன முறையில் இருதரப்பினரும் மோதலில் ஈடுபடுகின்றனர்.

இந்த மோதல்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டுமல்ல, அப்பாலும் பரவி, தலைநகரிலும் எதிரொலிக்கும் அபாயமே ஏற்பட்டுள்ளது.

இப்படி ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

(அ-ஐ-எ)

## பரிசளிப்பும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், அக். 31

உரும்பராய் இந்துக் கல்லூரி பவள விழாச் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பும் கடந்த சனிக்கிழமை கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றன.

கல்லூரி அதிபர். திரு. செ. சிவபாலன் தலைமை வகித்தார்.

யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ-எ)

### ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல்

# நேரில் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க அவதானிகளை அனுப்புக

## கூட்டணி கோரிக்கை

சென்னை, அக். 31

கோட்டை இராணுவ முகாமில் இருந்து யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்படும் ஷெல் தாக்குதல் பற்றி நேரில் பார்வையிட அவதானிகளை அனுப்பி வைக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியுள்ளது.

போர்க்காலத்தில் கூட ஆஸ்பத்திரிகள் தாக்கப்படுவது இல்லை. ஆனல் யாழ் ஆஸ்பத்திரி மீது நான்குதரம் இராணுவத்தினர் தாக்குதல்களை நடத்தி இருக்கின்றனர்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பிய வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. (அ-எ)

### விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்

# சேவை முன் பயிற்சி டிச. 7 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 31

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக சேவை முன் பயிற்சி டிசம்பர் 7ஆம் திகதி கல்வி அமைச்சின் கல்விச் சேவைப் பிரிவினல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கம்பளை, கிராஹம், பேராதனை ஆகிய இடங்களில் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் இப் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறும்.

ஏற்கனவே கடந்த காலத்தில் நடைபெற்ற ஆசிரிய நியமனத்திற்காக தெரிவு செய்யப் பட்டு தனிப்பட்ட வசதியீனங்களினல் பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்கள், டிசம்பரில் ஆரம்பமாகும் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் கோரிக்கையைத் தொடர்ந்து இந்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

அப்படியானவர்கள் கல்வி அமைச்சில் உள்ள கல்விச் சேவைப் பிரிவுப் பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்க வேண்டும் என்று ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் [illegible] கேட்டுக்கொண்டிருக்கிறார். (இ-எ)

## விளையாட்டரங்கு

### கிரிக்கெட்

# மத்தியஸ்தர்களுக்கு பரீட்சையும், வகுப்புகளும்

யாழ்ப்பாணம், அக். 31

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்திற்கு புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தராதரப் பரீட்சையும்—

அதற்கான விரிவுரை வகுப்புகளும் நவம்பர் மாதத்தில் நடைபெற இருக்கின்றன.

விரிவுரை வகுப்புகள் நாளை ஆரம்பமாகின்றன.

நவம்பர் 1, 2, 8, 9, 15, 16, 22 ஆம் திகதிகளில் (சனி ஞாயிற்றுக் கிழமைகளில்) காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை யாழ் இந்துக் கல்லூரியில் இந்த வகுப்புகள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

தராதரப் பரீட்சை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

விரிவுரை வகுப்புகளின் போது கிரிக்கெட் விளையாட்டின் 42 விதிமுறைகளும் மிக விரிவான முறையில் விவரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நலன்கருதி இம்முறை தமிழிலும் ஆங்கிலத்திலும் விடை எழுதுவதற்கு வசதியாக வினத்தாள்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோரும் வகுப்புகளில் பங்கு கொள்ள விரும்புவோரும் மத்தியஸ்தர் சங்கத்தின் உப செயலாளரும், பொருளாளருமான திரு எஸ். உமாகாந்தனுடன் (வர்த்தக வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) உடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(உ)

## சென். ஹென்றீஸ் வெற்றி

யாழ்ப்பாணம், அக் 31

பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் மேற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் முதற்சுற்று ஆட்டம் ஒன்றில் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை 9-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குத் தெரிவானது.

சென். ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இந்த ஆட்டம் நடைபெற்றது.

ஆரம்பம் முதல் இறுதி வரை இந்த ஆட்டத்தில் சென். ஹென்றீஸ் அணியே முன்னணியில் நின்றது.

பென்ஜமின் 5 கோல்களையும், பயஸ் 3 கோல்களையும், டொமினிக் ஒரு கோலையும் அடித்தனர்.

மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக்கழகமும் இணைந்து இந்தச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றன.

(உ)

## விளையாடாமலேயே வெற்றி

யாழ்ப்பாணம், அக். 31

மேற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று இரண்டாவது சுற்று ஆட்டத்திற்குத் தெரிவானதாக அறிவிக்கப்படுகிறது.

புத்தூர் சிறீ சோமஸ்கந்தா கல்லூரி அணிக்கு எதிரான ஆட்டத்திலேயே சென். பற்றிக்ஸ் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமையன்று இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற இருந்த முதற்சுற்று ஆட்டம் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை.

சோமஸ்கந்தா அணி போட்டியில் பங்குபற்றுவதிலிருந்து தானக விலகிக்கொண்டதே இதற்குக் காரணம். (உ)

## விக்கினேஸ்வரா - நெல்லியடி

யாழ்ப்பாணம் அக். 31

29 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் விக்கினேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மோதியது.

விக்கினேஸ்வராக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரியை 5-0 என்ற கோல்களால் வெற்றி பெற்றது.

போட்டியில் விக்கினேஸ்வரா வீரர்களில் சிவகுமார், ராஜ்குமார் தலா 2 கோலையும், தவராசா 1 கோலையும் போட்டனர்.

மத்தியஸ்தராக ஜோதிரவி கடமையாற்றினர்.

### நெல்லியடி

அதே தினம் நடைபெற்ற மற்றொரு போட்டியில் நெல்லியடி ம. ம. வியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மோதியது.

நெல்லியடி ம. ம. வித்தியாலயம் 5-1 கோல்களால் விக்ரோறியாக் கல்லூரியை வென்றது. நெல்லியடி ம. ம. வி. வீரர்களில் பரநிருபராஜா 3 கோல்களையும் ராஜசேகர், கோபிகிருஷ்ண தலா 1 கோலையும், விக்டோரியா வீரரான விஜயசேகரன் 1 கோலையும் போட்டனர்.

மத்தியஸ்தராக கமலநாதன் கடமையாற்றினர். இருபோட்டிகளும் நெல்லியடி ம. ம. வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. (இ)

## நாளைய போட்டி

யாழ்ப்பாணம் அக். 31

நாளை முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எதிராக யாழ்ப்பாணக்கல்லூரி போட்டியிடுகிறது. மாலை 4 மணிக்கு சுன்னகம் ஸ்கந்தாவுக்கு எதிராக மானிப்பாய் இந்துக் கல்லூரி போட்டியிடுகிறது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறும். (இ)

# ஷெல் தாக்குதலில் ஆஸ்பத்திரி ஊழியர் காயம்

புதனன்று யாழ் நகரில் நடந்த ஷெல் தாக்குதலில் தமது சம்பளத்தைப் பெறவந்த மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர் மா. இராமநாதன் உட்பட 4 ஆஸ்பத்திரி ஊழியர்கள் காயமடைந்தனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தாதியாக கடமைபுரியும் திருமதி [illegible] ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் சிற்றூழியராகக் கடமைபுரியும் ரி. இராசதுரை—

வட்டக்கச்சி வைத்தியசாலையில் கடமைபுரியும் செல்வி. பானுமதி ஆகியோரே மற்றையோர்.

கரவெட்டி வாசியான இராமநாதன் (35வயது) 85 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் இராணுவத்தால் சுடப்பட்டு வயிற்றில் காயத்துடன் தப்பியிருந்தார். தற்போது முதுகில் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-5)

# கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மீண்டும் உருவாகிறது

காங்கேசன்துறை, அக் 31

சாதாரண மனிதன் ஒன்றுபட்டு இயங்குவது கூட்டுறவின் ஆரம்பமே ஆகும். மக்கள் இயக்கமாகத் திகழ வேண்டிய கூட்டுறவு இயக்கம், நிர்வாகத் திறமையின்மை, மூலதனப் பற்றுக்குறை, அரசு தலையீடு, பெண்கள் பங்குபற்ருமை போன்றவற்ருல் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனல் இன்றுள்ள நிலையில் மீண்டும் மக்கள் இயக்கமாக அது மலர ஆரம்பித்துள்ளது.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினர்.

மகளிர் குழுத் தலைவி திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

வடபகுதியில் உள்ள சகல கூட்டுறவு அமைப்புக்களும் இணைந்து மத்திய அமைப்பை உருவாக்க வேண்டும். அதே போல் கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களும்இணைந்து மத்திய அமைப்பை உருவாக்கவேண்டும்.

பின் இரு மாகாண மத்திய அமைப்புக்களும் இணைந்து எமது பொருளாதார, பாரம்பரிய, இறைமை ஆகியவற்றை பேண முயல வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

தேசிய கூட்டுறவுத் துறைத் தலைவரும், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவருமான திரு. சி. சிவமகராசா உட்படப்பலர் உரையாற்றினர்.

போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு வைத்திய கலாநிதி கலாதேவி துரைச்சாமி பரிசில்கள் வழங்கினர். (இ-68)

## பாலர் கல்விக் கழக ஆண்டு விழா

யாழ்ப்பாணம், அக். 31

பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் 11 பாடசாலைகளின் 19 ஆவது ஆண்டு பெற்ருேர் தின விழாவும் கலை நிகழ்ச்சியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்குநடைபெறும்.

யாழ் - இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. ஆ. செல்லையா (ஓய்வு பெற்ற அதிபர்) தலைமை வகிப்பார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-10)

## கவின்கலை அரங்க நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், அக். 31

தமிழர் கலாசார அவையினரின் கவின்கலை அரங்கம் நடத்தும் வாராந்த கலை நிகழ்ச்சி யாழ். வின்ஸர் கலை அரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகும்.

வைத்திய கலாநிதி ரி. கெங்காதரனின் வேய்ங்குழலிசை, தமிழர் கலாசார அவையினரின் திருநெல்வேலி பிரிவு நடத்தும் 'உதயம்'நாட்டிய நாடகமும்'–

அரியாலை கலாமன்றத்தினர் வழங்கும் ''வீடுகள் விழிக்கின்றன'' நாடகமும் கவின்கலை அரங்கத்தில் இடம்பெறும்.

(இ-எ)

## அகதிகளுக்கு உதவி

சாவகச்சேரி, அக். 31

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக உள்ள சுமார் 119 குடும்பங்கட்கு உடைகள் அடங்கிய பொதிகள் வழங்கப் படவிருக்கின்றன.

ஜப்பானிலிருந்து கிடைத்துள்ளஇப்பொதிகளை டிறிபேக் கல்லூரியில் வைத்து இன்று வெள்ளிக்கிழமை உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா வழங்குவார். (உ-31)

A/L 87

PAPER CLASS

பிரிவு I

விரைவில் ஆரம்பம்

New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நாமாவளி சொல்லி உள்ளத்தைத் தூய் மைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

— காஞ்சி முனிவர்


உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

31-10-1986 த. பெ. இல. 23


# தீர்வும் தந்திரமும்

'இனப்பிரச்சினைத் தீர்வில் அடுத்த இரண்டு வார காலம் மிகவும் நெருக்கடியானது'.

'அரசின் சமாதான யோசனைகள் தோல்வி கண்டால் மாற்றுவழியை நாடுவோம்'.

இவ்வாறு ஸ்ரீலங்காவின் தேசிய பாது காப்பு மந்திரி திரு. லலித் அத்துலத் முதலி அவசர அவசரமாகக் கருத்துகளை வெளியிட்டு வருகிறார்.

திரு. லலித் இப்போது பொதுக் கூட்டங் களில் ஆற்றும் உரைகள், அவர் தம்மை அறியாமலே அவசரப்படுவதைப் பிரதிபலித் துக் காட்டுகின்றன. அந்த அவசரத்தில் அவர் முன்னுக்குப் பின்னர் முரணாகவும் பேசிவிடு கிறார்! பாவம்!

இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் தமக்கும் அரசாங்கத்துக்கும் உண் மையாகவே ஆசை இருப்பதாக அவர் ஒரு கூட்டத்தில் சொல்கிறார்.

அடுத்த கூட்டத்தில், சமாதான வழி தோல்வி கண்டால் மாற்று வழியை நாடப் போவதாகப் பூடகமாகப் பேசுகிறார். அதன் அர்த்தம் இராணுவ நடவடிக்கையை நாடுவது என்பதே.

பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று உண்மையாக விரும்புவதானால் இராணுவ நடவடிக்கை குறித்துச் சிந்திக்க வேண்டிய அவசியம் என்ன?

முப்பத்தெட்டு வருட காலமாகக் காட் டாத அவசரம் இப்போது ஏன்? சமாதான மாகவே தீர்க்க வேண்டும் என்பது உண்மை யான விருப்பமானால் எத்தனை காலமானாலும் அதற்காகக் காத்திருக்க வேண்டியது தான் பண்பும், அழகுமாகும்.

ஆனால் அமைச்சர் படும் அவசரம் அவர் இராணுவ நடவடிக்கையையே விரும்புகிறார் என்பதை நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உள் ளத்தின் உள்ளே இருப்பது தான் நிச்சயம் நாவில் வரும். அதனை மறைக்க முயன்றாலும் முடிவதில்லை. அமைச்சர் லலித்துக்கும் அது பொருந்தியிருக்கிறது.

இந்த இடத்தில் ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கும் செய்தி அறிக்கை ஒன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

தான் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப் படையில் தமிழர் தரப்பினர் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண முன்வருவர் என்ற நம் பிக்கை ஸ்ரீலங்கா அரசுக்கு இல்லை என்று அந்தச் செய்தி அறிக்கை கூறுகிறது.

தனது தீர்வுத்திட்டம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தப் போதுமானது அல்ல என்று நன்கு தெரிந்துகொண்டே, அரசாங்கம் அத னைச் சமர்ப்பித்திருக்கிறது. ஏ. எவ். பி. செய்தி அறிக்கை அதனைத்தான் மறைமுக மாகச் சொல்கிறது.

தமிழர் நிராகரிக்கக்கூடிய திட்டத்தைச் சமர்ப்பிப்பது; அவர்கள் நிராகரித்ததும் அத னைச் சாட்டாக வைத்து இராணுவ நடவ டிக்கையை மேற்கொள்வது. இதுவே அர சின் முழுத் திட்டமும் — தந்திரமும் ஆகும்.

இந்தத் தந்திரம் உலகத்துக்குத் தெரிய வராது என்று ஸ்ரீலங்கா அரசும், அமைச்சர் லலித்தும் நினைத்தால் அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றுகிறார்கள் என்று கொள்ள வேண்டியதுதான்!

ஸ்ரீலங்காவின் இந்தத் தந்திரம் இந்தியா வுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. ஆகையால் அது தனது மத்தியஸ்தர் முயற் சியில் தகுந்த உத்தியைக் கையாளவேண்டும்; கையாளும் என எதிர்பார்க்கலாம். இல்லை யேல் தமிழர்களை ஏமாற்றும் இலங்கை அர சின் நாடகத்துக்கு அதுவும் உதவியதாகவே முடியும்.

இந்தியா தானே ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்து வருவது ஸ்ரீலங்காவின் தந்திரத் தைப் புரிந்து கொண்டதால்தானோ என் னவோ!

எது எப்படி இருப்பினும் ஸ்ரீலங்காவின் தந்திரத்துக்கு ஈழத் தமிழர்கள் பலிக்கடாக் கள் ஆகாது பார்த்துக்கொள்வது தமிழ்ப் போராளிகளின் கடமையாகும்.

ஸ்ரீலங்காவின் தந்திரத்துக்குப் பலியாக வாய்ப்பளிக்கும் விதத்தில் இந்தியா நிர்ப்பந் தங்கள் எதையும் விதிக்குமாயின் அதனைச் சாணக்கியத்துடன் நிராகரிக்கும் ஒற்றுமை யும் சக்தியும் போராளிகளுக்குத் தேவை.

## காங்கேசன்துறையில் மின் விநியோகம் பாதிப்பு

காங்கேசன்துறை, அக்31

காங்கேசன்துறையில் மின்இணைப்பு கேபிள்கள் சேதமடைந்ததால் மின் விநியோகம் பாதிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை காங்கே சன் சிமெந்து ஆலையின் முக்கிய கேபிள்கள் எரிந் ததால் உற்பத்தி தடை ஏற்பட்டது.

மின் இணைப்பு கேபிள் களில் மழை நேரத்தில் பழுது ஏற்பட்டதால் காங்கேசன் துறை, மாவிட்டபுரம், ஊறணி விமன்காமம் உட்பட பல பகுதிகளில் மின் விநியோகம் பாதிக்கப் பட்டுள்ளது. பாவனை யாளர்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியுள் ளனர்.

இதற்கிடையில் காங் கேசன்துறை சிமெந்து ஆலையில் மின் விநியோ கம் செய்யும் உயர் சக்தி வாய்ந்த கேபிள்கள் செவ்வாய் இரவு எரிந்ததால் உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

(உ – 68)

## ஏவுகணை யோசனை அங்கீகாரம்

வாஷிங்டன், அக் 30

அடுத்த பத்தாண்டுகளில் கண்டம் விட்டுக்கண்டம் பாயும் சகல ஏவுகணை களையும் நடுத்தர ஏவு கணைகளையும் ஐரோப்பா வில் இருந்து அகற்று மாறு யோசிக்கப்பட் டதை நேற்றுக் கூடிய அமெரிக்க பாதுகாப்பு சபை அங்கீகரித்தது.

அமெரிக்க ஜனாதிபதி யும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

எனினும் இந்தவிஜயம் குறித்து அமெரிக்க நிர் வாகத்திற்குள்ளும் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளுக்கிடையேயும் கருத்து வேற்றுமை இருப் பதால் முக்கிய விஷயங் கள் இன்னமும் தயாரிக் கப்படவில்லை. (ஒ)

## இந்திய ஜனாதிபதி விஜயம்

புதுடில்லி, அக். 30

இந்திய ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் யூகோஸ்லாவியா, கிரேக் கம், போலந்து ஆகிய நாடுகளுக்கு 12 நாள் பயணம் மேற்கொண்டுள் ளார்.

இந்திய ஜனாதிபதி ஒரு வர் கிரேக்கத்திற்கு உத் தியோக பூர்வ விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும். (ஒ)

# ஆர்ஜென்ரீனாவில் போர் அபாயம்?

## போக்லாந்து பகுதியைப் பாதுகாப்பு வலயமாக பிரிட்டன் பிரகடனம்

புவனர்ஸ்அயர்ஸ், அக். 30

ஆர்ஜென்ரீனாவிற்கு அருகாமையில் உள்ள பிரிட்டனுக்குச் சொந் தமான போக்லாந்து தீவுப்பகுதியைப் பாது காப்பு வலயமாக பிரிட்டன் நேற்று பிர கடனப்படுத்தியது.

இதனைத் தொடர் ந்து மீண்டும் அப் பகுதியில் போர் அபா யம் தோன்றும் அறி குறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

பிரிட்டனின் இந்தத் திடீர் நடவடிக்கையால் ஆர்ஜென்ரீனா தனது கடற்பாதுகாப்புத் துறையை உஷார் நிலை யில் வைத்துள்ளது.

ஜனாதிபதி அல் போன்ஸே தமது அமைச் சரவையுடனும் முப் படை தளபதிகளுடனும் அவசரமாகக் கூடி நிலைமைபற்றி ஆலோசித் துள்ளார்.

ஆர்ஜென்ரீனாவின் பாது காப்புக்கு உதவுமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபையிடமும் விண்ணப் பம் செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனின் ஆதிக்கத் தில் உள்ள போக்லாந்து பகுதியை ஆர்ஜென்ரீனா முன்பு உரிமை கோரிய தும் அதனால் இரு நாடு களுக்குமிடையே பலத்த மோதல் ஏற்பட்டதும் அதனால் ஆர்ஜென்ரீனா விற்கு பலத்த சேத மேற்பட்டதும் தெரிந் ததே. (ஒ)

வெளி உலகில்

## நாகலாந்தில் புதிய அமைச்சரவை

கோஹிமா, அக். 30

நாகலாந்தில் புதிய அமைச்சரவை நேற்றுப் பதவி ஏற்றது.

புதிய முதலமைச்ச ராக இந்திரா காங்கிர ஸைச்சேர்ந்த கொக்கிசே சிமா பதவி ஏற்றார். 14 உறுப்பினர்கள் இவ ரது அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர்.

பதவி விலகும் முதல மைச்சர் ஜமீல் புதிய முதல்வரது பெயரை நாகலாந்து காங்கிரஸ் (ஐ)இன் தலைவராக தெரிவு செய்தார்.

புதிய பிரதமர் சிமா 1969 முதல் 1974 வரை நாகலாந்தின் முதல் வராக இருந்தார். 1983 இல் இமாலயப் பிரதேசத்தின் ஆளுன ராக நியமனம் பெற்றார்.

நாகலாந்தில் இந்திரா காங்கிரஸ் வளர்ச்சி பெறவேண்டும் என்பதற் காக பழைய அமைச்ச ரவை ராஜினாமாச் செய் தது. (ஒ)

## 2ஆயிரம் மாணவர் கொரியாவில் கைது

சோல், அக். 30

தென் கொரியாவில் அரசாங்கத்தை எதிர்த்து மறியல் போராட்டம் செய்யும் சுமார் இரண் டாயிரம் மாணவர்களை பொலிஸ் அதிரடிப் படைப்பிரிவு கைது செய்துள்ளது.

அரசாங்கத்தை எதிர்க் கும் பிரிவினரின் கூட்ட மொன்றை பொலிஸார் பலவந்தமாகக் கலைத்த னர்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் 'கொண் டூஸ்' பல்கலைக்கழகத்துக் குள் புகுந்து நான்கு கட்டடங்களை ஆக்கிர மித்துக் கொண்டனர்.

அவர்கள் கட்டடங் களைச் சுற்றி பெற்றோல் ஊற்றியுள்ளதுடன் பொலிஸார் நெருங்கி னால் கட்டடத்துக்குத் தீ வைக்கப் போவதாக வும் எச்சரித்தனர்.

வீதியோரத்தில் அமெ ரிக்க ஜனாதிபதி றேகன தும் ஜப்பானிய பிரத மர் நாகஸோனியினதும் கொடும்பாவிகளை எரித்த னர். அவர்களைச் சுற்றி வளைத்த பொலிஸார் பலரைக் காயப்படுத்திய துடன் சுமார் 2ஆயிரம் மாணவரைக் கைது செய் தனர். (ஒ)

## ஈரான் அனுமதித்தது

தெஹ்ரான், அக். 30

ஈராக் போர்க்கைதிகள் இருக்கும் பகுதிகளுக்கு விஜயம் செய்ய சர்வ தேச செஞ்சிலுவைச் சங் கத்திற்கு ஈரான் தற் பொழுது அனுமதி வழங் கியுள்ளது. (ஒ)

## புதன் கிரகம் காட்சி தரும்

புதுடில்லி, அக். 30

கிரகங்களின் சஞ்சாரத் தில் மிகவும் அரிய நிகழ் ச்சியாக புதன்கிரகம் நவ ம்பர் மாதம் 13 ஆம் திகதி பூமிக்கும் சூரியனுக் கும் இடையில் தோற்ற மளிக்கவுள்ளது.

சூரியனின் முன்பாக ஒரு சிறிய கறுப்புப்புள்ளி யாக புதன்கிரகம் காட்சி யளிக்கும்.

தொலைநோக்கி மூலம் மட்டுமே இதனைக் காண முடியும். (ஒ)

## ஷேக் யமானி ராஜினாமா

ஜடா, அக். 30

சவூதி அரேபியாவின் எண்ணெய்வள அமைச்ச ராக கடந்த இருபது வருடங்கள் பதவிவகித்த ஷேக் யமானி தமது பதவியில் இருந்து விலகி யுள்ளார்.

இவரது இடத்திற்கு திட்டமிடல் அமைச் சராக இருந்தவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இவரது ராஜினாமா விற்கான காரணங்கள் அறிவிக்கப்படவில்லை. (ஒ)

# அம்பிகை அனுஷ்டித்த கேதார கௌரி விரதம்

ஸ்ரீ கைலாயத்தி லே நவரத்தினங்களி னாலிழைத்த சிம்மாச னத்தின்மீது பரமேஸ்வ ரரும் பார்வதி தேவியும் கொலு வீற்றிருக்கின்ற னர். தேவர்களும், ரிஷி களும் தினம் தினம் பரமசிவனையும் பார் வதி தேவியையும் பிர தக்ஷிண நமஸ்காரஞ் செய்து கொண்டு போவார்கள். ஒருநாள் பிருங்கி என்கிற ரிஷி பார்வதி அம்மனைத் தவிர்த்து ஈஸ்வரரை மாத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து ஆனந் தக்கூத்தாடினார்.

இதனால் பார்வதிதேவி க்கு மகாகோபம் ஏற் பட்டது. பிருங்கிமக

ஞானக்கதிர்

ரிஷியின் தவறினை உணர்த் தவும் தகுந்த தண்டனை கொடுக்கவும் தீர்மா னித்து அவரை அருவ மாக்கினாள்.

பிருங்கி பரமன் தாள் பணிந்தான். அம்பிகை யைத் தவிர்த்து பரமன் பதம்பணிந்ததால் நேர் ந்த கதிபற்றி முறையிட் டான்.

இதனால் மனமிரங்கிய பரமேஸ்வரன் ஒரு தண்டை பிருங்கியிடம் கொடுத்தார்.

இதனால் கோபமடை ந்தபரமேஸ்வரிகைலையை விட்டு வெளியேறிபூலோ கத்தில் வால்மீகி மக ரிஷியின் பூங்காவனத் தில் ஒரு வில்வவிருக்ஷத் தின் அடியில் எழுந்தருளி னார்.

பன்னிரண்டு வருடங் கள் மழையின்றி உலர் ந்து வாடிய மரங்கள் எல் லாம் உடனடியாகவே துளிர்த்துத் தழைத்து, புஷ்பித்து, காய்த்தும் பழுத்தும் நின்றன.

அப்பொழுது அங்கு வந்த வால்மீகி முனிவர் அம்பிகையின் பதம் பணி ந்து, இந்தப்பூங்காவனத் திலே எனக்குக் காட்சி கொடுக்க கைலாயத்தை விட்டு பூலோகத்திற்கு நீர் எழுந்தருளியுள்ள தென்னவோ வென்று மிகவும் விநயத்துடன் தோத்திரஞ்செய்து வந்த காரணத்தை அடியே னுக்கு திருவுளம் பற்ற வேண்டும் என்றார்.

பரமேஸ்வரி வால்மீக முனிவரைப் பார்த்து —

''ஓ தபசியே! இந்தப் பூலோகத்தில் நான் ஒரு



விரதம் அனுஷ்டிக்க வேண்டும். நூதனமும் மேலானதுமான விரதம் ஒன்றிருக்குமாயின்அதை எனக்குச் சொல்லவேண் டும்'' என்று கேட்டார்.

வால்மீக முனிவர் தொழுது —

''தாயே! லோக மாதாவே! அபிராமியே! திரிபுர சம்மாரி! சிவ காமி! கௌரவலாச வாசகி! விபூதிருத்ராக்ஷி! கிருபா சமுத்ரி, கிருபா நந்தி! வேதஸ்ரூபி! உம் முடைய சந்நிதானத்தில் அடியேன் ஒரு விண்ணப் பம் செய்கிறேன்! கோப மில்லாமல் கேட்டு திரு வுள்ளம் பற்றவேண்டும்'' என்று சொல்லஅதென்ன வென்று அம்பிகைகேட்க ''ஜெகத்ரட்சகியே!இந்த பூலோகத்தில் ஒருவருக் கும் தெரியாத ஒரு விரத முண்டு. அந்த விரதத் திற்கு கேதாரீஸ்வரர் நோன்பென்று பெயர். அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்க வில்லை. அந்த விர தத்தை அனுஷ்டித்தால் இஷ்டசித்தியாகும்'' என்று சொன்னார்.

அதைப் பரமேஸ்வரி கேட்டு ''அந்த விரதம் எக்காலத்தில் எவ்வித மாக அனுஷ்டிக்க வேண் டுமென்பதை விவர மாய்ச் சொல்லவேண் டும்'' என்று கேட்க

வால்மீகி சொல்கிறார், 'புரட்டாதி மாதம் சுக் கிலபட்ச தசமி தொட ங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம் தீபா வளி அமாவாசை வரைக் கும் இருபத்தொருநாள் பிரதிதினம் ஸ்நானஞ் செய்து சுத்த வஸ்திரம் [illegible] கேஷஞ் செய்து விபூதி

சந்தனுஷதை புஷ்பஞ் சாத்தி, வெல்ல வுருண்டை, சந்தன வுருண்டை, மஞ்சளுருண் டை, அதிரசம், வாழைப் பழம், தேங்காய்,பாக்கு வெற்றிலை இவைகளை வகைக்கு ஒன்றாக

**நாளை கௌரிவிரதம்**

வைத்து வில்வார்ச்சனை தூபதீபம் நைவேத்தியஞ் செய்து நமஸ்கரித்து இருபத்தோரிழையாலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினம் தினம் ஒரு முடியாக இருபத் தொருநாள் முடிந்து தினமும் உபவாசமிருந்து நைவேத்தியஞ் செய்த அதிரசத்தையுமுண்டு இருபத்தொரு நாளும் கிரமமாக இவ்விரதத்தை அனுஷ்டித்தால், இருபத் தோராம்நாள்; தீபாவளி அமாவாசைத்தினம் பர மன் ரிஷபவாகனரூட ராய்க் காட்சியளித்து கேட்ட வரத்தையும் கொடுப்பார்.''

இதனால் அம்பிகை மகிழ்ந்து அதே பிரகாரம் ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் தசமிமுதல் அபரபட்சமும் சதுர்த் தசி அமாவாசை வரை இருபத்தொரு நாளும் வால்மீகர் தெரிவித்தபடி நியமநிஷ்டையுடன் உப வாசமிருந்து விரதம் அனுஷ்டித்தார்.

சகல மக்களும் இக் கேதாரகௌரிவிர தத்தை ஐப்பசிமாதசுக்ல தசமியன்று ஓர்குருவின் ஆசியுடன், ஆரம்பிக்க வேண்டும். (21) இருபத் தொரு இழைகள் கொண்டநூலில் இருபத் தொரு முடிச்சிட்டு கும் பத்தில் அதைச் சாத்தி 21ஆம்நாள் ஐப்பசி அமா வாசையன்று இரவில் மீண்டும் பூசை செய்து, அந்நூலைப் பெண்கள் தமது இடக்கையில் கட் டிக்கொள்ளவேண்டும்.

இச்சிறந்த விரதத்தை பக்தியுடன், அனுட்டிப் பவர்கள் மிகச் சிறந்த செல்வத்தையும், நீண்ட ஆயுளையும், மனதிற் கேற்ற கணவனையும், மிகநற்குண மக்கள் [illegible] றுப் பலகாலம் சீரும் [illegible] வாழ்வார் கள்.

- காவேரி யோகநாதன் -



பொய்யாமொழி

**குறள்:**

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

**பொருள்:**

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மை பேசுவானானால், அவன் தவத் தோடு தானமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்தவன்.

# சண்டையிட்டு மடியாதே! சரண் அடைந்தால் உன் பாதுகாப்புக்கு நாம் பொறுப்பு

## சிப்பாய்களுக்குப் புலிகள் கடிதம்

ஸ்ரீ லங்கா இராணுவ வீரனே! என்று விளித்து தமிழீழ விடுதலைப் புலி கள் சிப்பாய்களுக்கு எழு திய கடிதத்தில் சரண் அடையும்படி கோரி உள் ளனர். சரண் அடையும் சிப்பாய்களுக்குப் பாது காப்பு வழங்கப்படும் என்றும் உறுதி அளித் துள்ளனர்.

கடிதத்தின் சாரம் வரு மாறு:

நாம் ஏற்கனவே பல தடவைகள் துண்டுப் பிர சுரங்கள் வாயிலாகவும், ரேடியோ, தொலைக் காட்சி, பத்திரிகைகள் மூலமாகவும், துப்பாக்கி கள் மோட்டோ ஷெல் வாயிலாகவும் நேரிலும் 'பேசி' நன்கு அறிமுகமா யிருக்கிறோம்.

ஆனால் சிறிலங்கா இராணுவ வீரனே! இத் தனை அறிமுகங்களில் நீ போராட்டத்தின் ஒரு பக்கத்தைத்தான் பார்த் திருப்பாய். போராட் டத்தின் மறு பக்கத்தைப் பற்றியும் உன்னிடம் சில வரிகள்.

மிகுதி உனது சிந்த னைக்கு......

சிறிலங்கா இராணுவ வீரனே! உனது உலகம் மிகக் குறுகியதாகவும் உனது குடும்பம் மிக ஏழ் மையாக இருப்பதாலும் நீ ஏமாற்றப்படுகிறாய். அல்லது ஏமாற்றப்படும் நிலைக்குத் தள்ளப்படு கிறாய்.

உனக்கு நாமும் எம் மக்களும் கொடிய 'எதிரி களாகவே' சித்திரிக்கப் பட்டிருப்போம். ஆனால் அந்த எதிரிகளுக்கு உன் னைப்பற்றியும் உன் கடின வாழ்வைப் பற்றியும் நிச் சயமாகப் புரியும் - தெரி யும்.

உனது குடும்ப நிலையை; ஏழ்மையான வாழ்வை; முகாமின் நாலு சுவருக்குள் வாழும் வாழ்வை; நேருக்கு நேர் சந்திக்கும் துப்பாக்கிக் குண்டுகளில் இருந்து விலகி தொடர்ந்தும் மர ணத்துடன் போராடும் உனது வாழ்வை, நாம் புரிந்து கொள்வோம்.

நாமும் உன்னைப்போல தினசரி சண்டை போடும் 'போர் வீரர்கள்' என்ப தோடு தூய இலட்சியத் திற்காகப் போராடும் 'விடுதலைப் போராளிகள்' என்பதால் உன்னையும் உன் சகாக்களையும் எம் மால் உணர்ந்துகொள்ள முடியும்.

### மரணத்தில் உல்லாச வாழ்வு

மரணத்தை வென்ற வன் தூய்மையானவனா கத்தான் இருக்கமுடியும். இந்த வகையில் சிங்கள இனத்தவரிடையே நாம் முதலாவது நம்புவது உன்னைத்தான். உன் மர ணத்தில் உல்லாச வாழ்க்கை வாழும் சிங் கள அரசியல்வாதிகளை அல்ல.

ஆனால் நாம் சண்டை போடுவது தவிர்க்க முடி யாதது. எம் மக்களை, மண்ணை ஆக்கிரமித் துள்ள உன்னை விரட்டும் வரை எமது துப்பாக்கி கள் ஓயாது கனன்று கொண்டே இருக்கும்.

பிறந்த இடமாகிய சிங்கள சிறிலங்காவில் உன்னால் சுதந்திரமாக வாழ முடியும். ஆனால் எமது பாரம்பரிய பிர தேசத்தில் நாம் பிறந்த இடத்திலேயே எம்மை அடக்கி ஒடுக்கி வரும் சிறிலங்கா அரசையும் அடக்குமுறைக் கருவி யாகிய உன்னையும் சகித் துக்கொண்டு எம்மால் வாழ முடியாது.

மேலும் இராணுவ அடக்குமுறைகள் மட் டும் தான் எம் இனத்தின் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைகள் அல்ல. சிறிலங்கா சிங்கள முதலாளித்துவ அரசுகள் எம் இனத்தின் மீது திணித்துள்ள சமூக, பொருளாதார, கல்வி அடக்குமுறைகளின் உச்ச வடிவத்தின் பின் நாம் பிரிந்து போகத் தீர் மானித்து தனித் தமி ழீழக்கோரிக்கையைமுன் வைத்தபோது அதை நசுக்கவே சிறிலங்கா அரசு உன்னைப் பயன் படுத்தத் தொடங்கியது.

நீயும் சுய சிந்தனை யின்றி இம் மண்ணில் புரிந்த கொலைகளும் நாசகார வேலைகளும் ஏராளம். நீ இம் மண் ணில் புரிந்துவரும் இன வெறிப் போராட்டம் எம் மனதில் ஆழமான வடுக்களை ஏற்படுத்திய போதும் நாம் எச் சந் தர்ப்பத்திலும் மனித நேயத்தையோமனிதாபி மானத்தையோ கை விடவில்லை.

இதேநேரம் நாம் எம் மக்களை பாதுகாக்க சில

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மெய்கண்டார் குருபூசை

யாழ்ப்பாணம், அக். 31

கரம்பன் குரு மடத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி அளவில் மெய்கண்டார் குரு பூசை நிகழும்.

மாணவர் கலந்து கொள்ளும் சிவஞான போத சூத்திரங்கள் மனனப் போட்டியும் பரி சளிப்பு விழாவும் அன்று இடம் பெறும்.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BITSMANS INSTITUTES
MANIPAY.
87 U.G. A/L பௌதிகம் (மீட்டல்)
பௌதீகம் (புலங்கள்)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஆசிரியர்: Mr. சௌந்தி B.Sc (Hons)
சனி, ஞாயிறு 7 00 A m

# உதயன்

31 - 10 - 1986 வெள்ளிக்கிழமை

BITSMANS INSTITUTES
MANIPAY.
88 A/L தூய கணிதம்
(இருபடிச் சமன்பாடு)
பிரயோக கணிதம்
(வேக நேரவளையி)
ஆரம்பம்: 02 - 11 - 86 Sat 3 30 p.m.
(நேர அட்டவணை: SAT-SUN-3.30 to 6.00) p.m.

## கோட்டை முகாமை--:

(1-ம் பக்கத்தொடர்ச்சி) றும் வைத்தியர்களும் ஏனைய பணியாட்களும் பாதுகாப்பு அற்ற நிலையில் இருப்பதாகவும் வாட்டில் தங்கியிருக்கும் நோயாளர்கள், வெளி நோயாளர்கள் ஆகியோரும் இதே நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே இப்படிப்பட்ட சம்பவங்களை மேலும் எதிர்நோக்காமல் இருப்பதற்காக இராணுவ முகாமை அகற்றுமாறு வைத்திய சங்கத்தினர் தரப்பில் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கு பதிலளித்த பாதுகாப்பு அமைச்சர் இராணுவமுகாமை அகற்றுவது இயலாத காரியம் என்றார்.

ஆனால் ஆஸ்பத்திரியை அண்மித்த பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் நடைபெற மாட்டாது என்று உறுதி அளித்தார்

அதுபோல் யாழ். ஆஸ்பத்திரியில் இருந்தே கடந்த காலங்களில் கோட்டை இராணுவ முகாம்மீது தாக்குதல் நடைபெற்றது எனவும் அதை வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் பார்த்தாகவும் அவர் கூறினார்.

இனிமேலாவது அங்கிருந்து தாக்குதல்கள் தொடர்வதை டாக்டர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் தாதுக்குழுவை அத்துலத் கேட்டுக்கொண்டாராம். (இ)

## நினைவுதின கூட்டம்

ஆயர் லக்ஷ்மன் விக்ரமசிங்க நினைவு தினக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

வண பிதா போல் கஸ்பேர்ஸ், வண, யோஹன் தேவானந்தா ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர். (உ - எ)

# போராளிகள் நிலைப்பாடு
# 'சார்க்' மாநாட்டுக்கு முன்
# தெரிவிக்கப்பட வேண்டும்

## தமிழ் நாடு அரசை மத்திய அரசு கோருகிறது

புதுடில்லி, அக். 30

எம். ஜி. ஆர்.-போராளிகள் சந்திப்புக்கள் 'சார்க்' மாநாட்டுக்கு ஒரு வாரம் முன்னதாக முடிவடைந்துவிட வேண்டும் என்றும் போராளிகளின் நிலைப்பாட்டை 'சார்க்' மாநாட்டிற்கு முன்னர் அறிவிக்கும்படியும் இந்திய அரசு, தமிழ்நாடு அரசைக் கோரியுள்ளது.

புதுடில்லி வட்டாரங்களை ஆதாரங்காட்டி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார்.

திரு. ஜி. கே. ரெட்டி, 'இந்து'வில் எழுதியிருப்பதாவது;

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர்.-போராளிகள் சந்திப்பில் போராளிகளின் ஆரம்ப பிரதிபலிப்பு, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தெரிவிக்கப்பட்டு விட்டது.

போராளிகளிடம் இருந்து அவர்களின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசின் யோசனையை முற்றாக நிராகரிக்காது, தமிழரின் நியாயமான அபிலாஷைகளை கூறும் அதே நேரத்தில், இலங்கை அரசின் யோசனைகளில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி கூட்டுக் கருத்து ஒன்றை போராளிகள் முன்வைக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம்.

போராளிகள் முன் வைக்கும் இந்த பொதுக் கருத்தின் அடிப்படையில் தான் பெங்களூரில் ஜெயவர்த்தன - ராஜீவ்காந்தி பேச்சு அமையப் போகின்றது.

நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள எம். ஜி. ஆர்.-போராளிகள் கருத்துப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து மேலும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறும்.

எல்லாக் கருத்துப் பரிமாற்றங்களும் பெங்களூர் மாநாட்டுக்கு ஒரு வாரம் முன்னதாக முடிவடைய வேண்டும் என்று இந்தியா அறிவித்து விட்டது.

அப்பொழுது தான் கூட்டணி - போராளிகள் கருத்துக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொது அபிப்பிராயம் ஒன்றை முன் வைத்து பெங்களூரில் ஜெயவர்த்தனவுடன் ராஜீவ்காந்தி பேச்சுக்களை நடத்தமுடியும்.

இப்படி திரு. ஜி. கே. ரெட்டி கடந்தசெவ்வாய் வெளியான 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

அண்மையில் இடம் பெற்ற எம். ஜி. ஆர். -போராளிகள் சந்திப்புக்கு முன்னர் போராளிகளின் நிலைப்பாட்டை தமிழக புலனாய்வுத் துறைப் பொலீஸ் அதிபர் மோஹன் தாஸை புதுடில்லிக்கு அழைத்து இந்திய அரசு அறிந்து கொண்டதாக 'இந்து'வில் வெளியான இன்னொரு செய்தி கூறுகிறது. (இ-ஐ-எ)

## விஜே தமிழ் பெண்ணை மணப்பாராஹல் வீட்டுப்பிரச்சினை தீரும்!

கொழும்பு, அக். 31

விஜே குமாரணதுங்க ஒரு முட்டாள். சிங்கள இளைஞர்கள் தமிழ்ப் பெண்களை மணந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகிறார். அவர் தமிழ்ப்பெண்ணை மணந்து உதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டும். அப்படிச் செய்தாராஹல் அவரின் வீட்டுப் பிரச்சினையே தீர்த்துவிடும்.

இப்படிச் சொன்னார், எதிர்க்கட்சித் தலைவரும் நுவரெலியா மூன்றாவது எம். பி. யுமான திரு அனுரா பண்டாரநாயக்கா.

திரு. அனுரா பண்டாரநாயக்காவின் சகோதரி சந்திரிகாவைத்தான் திரு. விஜே குமாரணதுங்க திருமணம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

திரு. விஜே குமாரணதுங்க ஒரு முட்டாள். நாட்டின் 2500 ஆண்டுச் சரித்திரத்தை மாற்றி அமைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று விஜே கனவு காண்கின்றார். அவரின் அரசியல் அறிவு அவ்வளவுதான்.

இப்படி அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் சொன்னதாவது;

ஜனாதிபதி தான் ஆயுதப்படைத் தளபதி. அவரே சொல்லி விட்டார், மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்ற வேண்டும் என்று-

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசின் ஆயுதப் படைத் தளபதி இப்படிக் கூறலாமா?

ஜனநாயக விரோத வழிகளில் பதவிக்கு வர நான் விரும்பவில்லை. ஆனால் மக்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டங்களை நான் அனுமதிக்க முடியாது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

நுவரெலியாவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கே. எம் பி. ராஜரத்தின உட்பட பலர் பேசினர். (இ-எ)

## தொலை ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி) ஸ்தம்பித்துள்ளன.

இந்த அறிக்கையில் அரசாங்கத்தின் எதிர்கால இராணுவத் திட்டங்கள் ஏழு குறித்து விவரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

''ஸ்ரீலங்கா அரசு ஈழப் பிரதேசத்தில் பெரும்பகுதியை விஸ்தரிப்பின் ஊடாக விழுங்குவதற்கு தயாராகும் இச் சூழ்நிலையில் அனைத்துப் போராட்ட அமைப்புகளும் தமது முழுக் கவனத்தையும் எம்மை நெருங்கி உள்ள எதிரியின்பால் திசை திருப்ப வேண்டும். அதுவே இன்றைய அவசியமாகும்-''

''இதனை நிறைவேற்றுவதற்கு களத்தில் நிற்கும் சக்திகளிடையே உண்மையான ஐக்கியம் பேணப்பட வேண்டுமென வலியுறுத்த விரும்புகிறோம்-- என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது'' (அ)

## ஜீ. சி. ஈ.—

(1-ம் பக்கத்தொடர்ச்சி) களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரியில் தாவரவியலில் தி. சத்தியசீலன் என்ற மாணவன் நான்குபாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளார்.

யாழ். இந்துக்கல்லூரி மூலம் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எடுத்த மாணவர்களில் 120 மாணவர் பல்கலைக்கழக கல்வி பெறும் தகுதியைப் பெற்றுள்ளார்கள்.

இவர்களில் 77 பேர் கணிதத்துறைக்கும் 34 பேர் தாவரவியல்துறைக்கும் 9 பேர் கலை வர்த்தகத்துறைக்கும் தகுதி பெற்றனர். (இ-எ-10)

## சண்டையிட்டு மடியாதே

(3-ம்பக்கத் தொடர்ச்சி) வரலாற்று நியதியிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

### உண்மைகளை மறைக்க முடியாது

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றில் அரச படைகளுடனான மோதலில் சரணடைந்தவர்கள் அல்லது கைதுசெய்யப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டதோ அல்லது கொல்லப்பட்டதோ கிடையாது.

இந்த வரலாற்றுண்மையை எவரும் மறைக்கவோ அல்லது மறக்கவோ முடியாது. எம்மை நோக்கிச் சுட்டவர்களை கூட நாம் கைதுசெய்து துன்புறுத்தாமல் விடுதலை செய்திருக்கிறோம்.

ஒரு தெளிவான சிந்தனையில் நடைபெறும் எமது போராட்டத்தில் சரணடையும் அரச படையினர் எப்போதும் துன்புறுத்தப்படாமல் விடுவிக்கப்படுவர்.

இந்தவகையில் ஏற்கனவே 10.7.85 இல் யாழ் பொலீஸ் நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள், 27.10.85இல் மன்னார் பொலீஸ் நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட சுனில் பண்டார மைக்கல் பெர்னண்டோ, 28.8.86 இல் ஆனையிறவு ராணுவமுகாம் சிப்பாய்களாகிய பிரேமரட்ண, மங்கல ஆகியோர் எதுவித துன்புறுத்தலுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

இவைகளைத் தொடர்ந்து மன்னார் அடம்பனில் இடம்பெற்ற நேரடி மோதலில் சிறிலங்கா இராணுவத்தின் 16 உடல்களையும் கைப்பற்றினோம். இரு இராணுவ வீரர்களைச் சிறைபிடித்தோம். அன்றுதான் மன்னார் பிராந்திய தளபதி விக்ரர் வீரமரணமடைந்தார்.

இப்போர் வரலாற்றில் ஓர் சிறு சம்பவமான போதும் இது பல திருப்பு முனைகளை ஏற்படுத்தியது. சிறிலங்கா அரசின் பொய் வேடத்தை அம்பலமாக்கியது. உனக்கு தெரியாமல் சிறிலங்கா அரசு மூடி மறைத்த உண்மைகள் அல்லது மூடி மறைக்க எண்ணிய செய்திகள், உண்மை என நிரூபிக்கப்பட்டன.

இப்போரில் கைப்பற்றிய உடல்களில் கையளிக்கக்கூடிய நிலையிலிருந்து 9 உடல்களையும் யாழ், கோட்டை இராணுவ முகாமில் நேரடியாக கையளித்தோம். தொடர்ந்தும் இராணுவத்துடனான மோதலில் கைப்பற்றும் உடல்களையும் நிச்சயம் கையளிப்போம்.

இதே நேரம் உன்னுல் கைது செய்யப்படும் போராளிகள், மக்கள் ஸ்ரீலங்கா அரசின் ஆணைப்படி உன்னுல் கோரமாக தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் மிகச் சாதாரணம்.

நீயும் ஓர் போர் வீரன் என்பதால் யுத்தத்தில் இறக்கும் ஓர் போர் வீரனது இறுதி ஆசை உனக்குப் புரியும். தன் உடல் அழுகி ஒழுகாமல் அடக்கம் செய்யப்பட வேண்டும் எனும் அவனின் ஆசை நியாயமானதே.

நீ இச் சண்டைகளில் நாட்டுக்காகவோ அல்லது கூலிக்காகவோ போரிட்டு மடிந்தாலும் அல்லது சிறைப்பிடிக்கப் பட்டாலும் இம் முதலாளித்துவ அரசுகள் அதை அலட்டிக் கொள்ளப் போவதில்லை என தெளிவாக நீயே உணர்ந்து கொள்ளலாம்.

இதுவரை இறந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் உடல்கள் முகவரிகள் வெளியே தெரியாமல் மூடிமறைக்கும் பணியையும் சிங்கள முதலாளித்துவ அரசுகள் திறம்பட செய்து வந்துள்ளமை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் எம் மக்களை பாதுகாத்து எம் மண்ணை விடுவிக்கும் இலட்சியப் போரில் நாம் வெற்றி பெற்று இன்று தமிழீழ உருவாக்கத்திற்கான கால கட்டத்தில் இருக்கிறோம்.

### சரணடைந்தால் பாதுகாப்பு

நீ புரியும் ஒவ்வொரு கொலையும் போராட்டத்தைப் பல மடங்கு வளர்த்துத்தான் வருகிறது.

நீ இராணுவ ரீதியில் தொடர்ந்து பலம் பெற்று வந்த போதும் எமது போராட்டத்தின் படிப்படியான வளர்ச்சிகள், வெற்றிகள் இன்று உன்னை முகாமிற்குள் முடக்கியிருக்கிறது.

இன்று நீ உயரிய இலட்சியமாகிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தால் முறியடிக்கப்பட்டு வருகிறாய். இதே நிலையில் காலப்போக்கில் நீ விரட்டியடிக்கப்படுவது உறுதி.

எனவே நீ இம் முதலாளித்துவ அரசைப் பாதுகாக்க வீணே சண்டையிட்டு மடியாதே. நேரடிப் போரில் நீ சரணடையும்போது உனது உயிரிற்கும் உனது பாதுகாப்பிற்கும் நாம் முழுப் பொறுப்பு. சொன்ன சொல் தவறாத விடுதலைப் புலிகளின் வரலாறு உன்னையும் விடுதலை செய்யும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தேவை

எமது கடலுயிர் வளர்ப்புத் திட்டத்திற்காக பாலை மீன், வெள்ளை றால் போன்றவற்றின் குஞ்சுகள் உயிருடன் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகிக்கக் கூடியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

பண்டிதர் சரணாலயம்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எமது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

(மீட்டல் வகுப்புக்கள்)

A. / L. 87 DAY CLASSES

ஆரம்பம்: 3-11-86 காலை 8 மணி

Saturday, Sunday Classes

ஆரம்பம்: 9-11-86 பகல் 12 மணி

முக்கிய குறிப்பு:

1. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து நடத்தும் ஒரே நிறுவனம்
2. கலை, வர்த்தக வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றன.

Wickna Tuition Centre
52, Stanley Road, JAFFNA.

## யாழ் நகரில் புதிய--

(1-ம் பக்கத்தொடர்ச்சி) அவசர மருத்துவ சேவை தொண்டர்கள் (ஈ. எம். எஸ்) பாதிக்கப்பட்டோரை பொதுமக்கள் உதவியுடன் அவ்வப்போது குறிப்பிட்ட இடங்களில் இருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சேர்த்து அவசர சிகிச்சைக்கு உட்படுத்தினர்.

ஷெல் தாக்குதலில் மரணமான தம்பிராசா தவதீசனின் ஒன்றரைப் பவுண் தங்கச்சங்கிலி ரூபா 235 பணம் கைக் கடிகாரம் என்பன உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டன.

இது தவிர எம்மாற் பாரமேற்கப்பட்ட திருமதி பகவதி கணபதிப்பிள்ளை என்பவரின் கைப்பை, 2, 306 ரூபாவுக்கான காசோலை, 125 மொடல் மோட்டார் சைக்கிள், அடையாள கார்ட், பி. கே. 61735 ஏ. பி. 5155 இலக்கங்களை உடைய இரண்டு சைக்கிள்கள் மற்றும் சில பொருள்கள் யாழ் போதனா வைத்திய சாலைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எமது அவசர மருத்துவ சேவையினர் அன்றையதினம் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கக்ளுகு பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை உடன் தெரியப்படுத்தினர்.

ஷெல் தாக்குதலில் உயிர் இழந்தவரின் குடும்பத்தினருக்கும் காயப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கும் அவசர மருத்தவ சேவையினராகிய நாம் எமது ஆழ்ந்த வேதனையை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ரெஸோ அஞ்சலி

யாழ்ப்பாணம், அக். 31

நேற்று இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பலியான யாழ். மத்திய கல்லூரி உயர்வகுப்பு மாணவன் விபுலானந்தனுக்கு தமிழீழ மாணவர் பேரவை தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றையும் பேரவை விடுத்துள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட முன்னெடுப்பை ஒடுக்குவதற்கு ஸ்ரீலங்கா நவபாஸிச அரசு பல்வேறு வழிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளது.

அந்த வகையில் எதிர்கால புத்தி ஜீவிகளை உருவாக்குகின்ற கல்வி நிறுவனங்கள் மீதும் தமிழ் பேசும் மாணவர் மீதும் தனது கொலைக்கரங்களை விரிவுபடுத்தி வருகிறது.

காலம் காலமாக எமது பாரம்பரிய பிரதேசங்களில் கல்வி பயிலும் மாணவர் அரசபடைகளினுல் கொலைசெய்யப்பட்டு வந்திருக்கின்றனர்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## பல்கலைக்கழ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி) இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலம் முடிவில் யாழ் பல்கலைக்கழக ஊழியார் சங்கத் தலைவர் திரு. ஆ. குணரத்தினம் தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

கடமையை அன்று பகிஷ்கரிக்கும் தீர்மானத்துடன் ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ)

## கோட்டை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி) டது.

இவரது இறுதிக் கிரியைகள் இன்று கஸ்தூரியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக யாழ் அரச அதிபருக்கும் கல்வித்திணைக்களத் திற்கும் கல்லூரி அதிபர் முறையீடுசெய்தார்.

கோட்டையில் இருந்து வந்து துப்பாக்கி வேட்டுக்குப் பலியான மாணவன் விபுலானந்தன் ஒரு சிறந்த மிருதங்கக் கலைஞர் என்றும் இதுவரை 30 கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லியோ கிளப்பிலும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிகேட்' டிலும் இவர் பதவி வகித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஆயுத அச்சு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி) பல் வேறு விடுதலை ஸ்தாபனங்களினதும், அனைத்துப் போராளிகளினதும் பொதுமக்களினதும் அயராத உழைப்பால் நகர்த்திச் செல்லப் படுகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினுள் தலைவிரித்தாடிய அராஜகத்துக் கெதிராக விடாப்பிடியாக போராடிவந்த போராளிகள் கடைசிக் கணம் வரையும் மக்களுக்கான தமது பணியை தம்மால் இயன்றவரை ஆற்றிவந்துள்ளனர்.

இவ்வாறு செயற்பட்டு வந்த புளொட் போராளிகளுக்கு தடைவிதிக்கப் பட்டதேன்? இரத்தக் களரியை எதிர்நோக்க நேரிடும் வகையில் அவர்களுக்கு கிடைத்திருக்கும் அச்சுறுத்தலின் பின்னணி என்ன? இவை அனுமதிக்கப்படக் கூடியவையா? ஈழப் போராட்டம் எங்கு கொண்டு செல்லப்படுகிறது? இவை போன்ற நியாயமான கேள்விகளுக்கு பதில் [illegible] உன்னதமான இலட்சியங்களோடு மக்களுக்கான விடுதலையை நேசித்து அதற்காக உழைத்த போராளிகள் ஒவ்வொரு கணமும் மரண பயத்தோடு திரிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாகக்கொண்ட பல போராளிகள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். சாவு அவர்களைப் பின் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை, என்ன செய்யப்போகிறோம் என்று எதுவும் தெரியாமை அடைக்கலத்திற்கு யாரும் இல்லை, அனாதைகளாக நடுத்தெருக்களில்.........

கிழக்கு மாகாணத்திலும், வன்னிப்பகுதியிலும் எதிரிப்படையின் காண்டுமிராண்டித் தனமான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் மக்களை வேட்டையாடிய வண்ணமே உள்ளன.

பேச்சுவார்த்தை நாடகம் சர்வதேச அரங்கில் போராட்டத்தை நசுக்கு[illegible] உக்கிரமடைந்துள்ளது. இத் [illegible] சூழ்நிலையில் மொத்தப் போராட்டத்தை குத்தகைக்கெடுத்த மனோபாவம் கேடுகளை விளைவிக்கும். அனைத்துப் போராளிகளுக்கிடையேயும் உறுதியான ஐக்கியம் வார்த்தெடுக்கப்பட வேண்டிய காலகட்டமிது.

★ இந்தப் பின்னணிகளில் புளொட் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்படல் வேண்டும்.

★ கைது செய்யப்பட்டுள்ள புளொட் போராளிகள் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ அவர்கள் சுதந்திரமாக முடிவுகள் எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

★ போராளிகளுக்கிடையே ஐக்கியத்தை சீர்குலைக்கும் வகையிலான ஆயுத அச்சுறுத்தல்கள் நீக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறோம், எமது இந்த நியாமான நிலைப்பாட்டிற்கு மக்கள் ஒத்துழைப்புவழங்குவார்கள் என நம்புகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

A/L 87

தூய பிரயோக கணிதம்

துரித மீட்டல் பகல் நேர வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7.45: காவிகள்
9.09: அட்சர கணிதம் (கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:
ரவிமோகன்
(யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

விற்பனைக்கு

கந்தர்சஷ்டி கவசம் கைக்கு அடக்கமான சிறிய புத்தகம் விற்பனையாகிறது விலை ரூபா 1/25 வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. நாயக பாலன்ஸ் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

இறைச்சிக்கான கோழி மொத்த விற்பனைக்குண்டு உடனே தொடர்பு கொள்க. இளைஞர் விவசாயப் பண்ணை, பழைய விமானப் பாம், கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
வெளியிட்ட திகதி: 31 - 10 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org